நடைபெற்றுவரும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக் கூட்டத் தொடருக்கு வராமைக்கான அனுமதி அளிக்கப்பெற வேண்டும்”

*என்ற தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *தீர்மானத்தை வழிமொழிதல்.*

**திரு. துரைமுருகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கொண்டு வந்துள்ள இந்தத் தீர்மானத்தை நான் வழிமொழிகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களின் தீர்மானம் முறைப்படி வழிமொழியப் பெற்றுள்ளது. தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் 'ஆம்' என்க.* (ஆம்)

*மறுப்போர் 'இல்லை' என்க.* (இல்லை)

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.* (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 11—20*

## 3. தகவல் கோரல்

### (அ) NEET தேர்விலிருந்து தமிழக மாணவர்களுக்கு விலக்கு அளிக்கக் கோரும் இரண்டு சட்ட முன்வடிவுகளுக்கு குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெற நடவடிக்கை எடுத்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள். என்னவென்று சொல்லுங்கள்.*

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாநிலத்தினுடைய பெயர் 'மதராஸ்' என்று அழைக்கப்பட்டதை, 'தமிழ்நாடு' என்று பெயர் மாற்றி, அதற்காக, 1967 ஆம் ஆண்டு, இதே தேதியில், இந்தப் பேரவையில், பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒரு தீர்மானத்தைக் கொண்டுவந்து நிறைவேற்றிய 'பொன் விழா ஆண்டு' என்பதை நான் இங்கே

*நினைவுபடுத்தி, (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அவையிலே தங்களுடைய அனுமதியோடு பதிவு செய்ய விரும்புகிறேன்.*

*அடுத்து, ஒரு முக்கியமான பிரச்சினை. 'NEET' தேர்வு பிரச்சினை. இந்தப் பிரச்சினை குறித்து பல நேரங்களில் இங்கு விவாதிக்கப்பட்டிருக்கிறது. எனவே, அதிகமாக அதைப்பற்றி நான் விவாதிக்க விரும்பவில்லை என்று சொன்னாலும், அவசியத்தை, அவசரத்தை, இன்றைக்கு இருக்கக்கூடிய மாணவர்கள் படக்கூடிய துன்பங்களை, துயரங்களை அடிப்படையாக வைத்து, ஒரேயொரு பிரச்சினையை தங்கள் மூலமாக இந்த அவைக்கு, இந்த அரசின் கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன்.*

*மாநில பாடத் திட்டத்தில் 4.2 இலட்சம் மாணவர்கள் படிக்கிறார்கள். CBSE பாடத் திட்டத்தில் 4,675 பேர் மட்டுமே படித்துக் கொண்டிருக்கிறார்கள். 'NEET' தேர்வு எழுதியிருக்கும் 88,431 பேரில், ஜூன் 22 ஆம் தேதியிட்ட ஆணையில் குறிப்பிட்டிருக்கின்ற அடிப்படையில், CBSE பாடத் திட்டத்தில் படித்த மாணவர்கள் 4,675 பேர் மட்டுமே. மீதமுள்ள 84,000 மாணவர்கள் மாநில பாடத் திட்டத்தில் +2 படித்தவர்கள். ஆகவேதான், 'NEET' தேர்வுக்கு விலக்களிக்க வேண்டுமென்று வலியுறுத்தி, இதே சட்டமன்றத்தில், 1–2–2017 அன்று ஏகமனதாக எல்லா கட்சிகளும் ஒருங்கிணைந்து இரண்டு மசோதாக்களை நிறைவேற்றி, அந்த இரண்டு மசோதாக்களுக்கும் குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெற வேண்டுமென்ற நிலையில், டெல்லிக்கு அனுப்பி வைத்தோம். ஆனால், அது குடியரசுத் தலைவருக்கு அனுப்பப்படாமல் மத்திய அரசின் அலுவலகத்திலேயே கட்டிப் போட்டு வைத்திருப்பது, கூட்டாட்சித் தத்துவத்திற்கு விரோதமாக இருக்கிறது. இந்தச் சூழ்நிலையில், மாநில பாடத் திட்டத்தில் படித்த மாணவர்களுக்கு 'NEET' தேர்வின் அடிப்படையில் 85 சதவிகித இடங்களை ஒதுக்கி, 22–6–2017 அன்று அரசாணை வெளியிடப்பட்டிருக்கிறது. மாநில பாடத் திட்டத்தில் படித்தவர்களையும், மத்தியில் உள்ள CBSE பாடத் திட்டத்தில் படித்தவர்களையும் ஒரே தட்டிலே வைத்து நாம் பார்க்க முடியாது என்பதை நீதிமன்றத்தில் ஆணித்தரமாக வாதிட்டு, அரசாணையை இந்த அரசால் காப்பாற்ற முடியவில்லை என்பது ஒரு செய்தி. அதைவிட ஓர் அருமையான சந்தர்ப்பம் இந்த அரசுக்குக் கிடைத்தது. குடியரசுத் தலைவர் தேர்தலில், மத்தியில் உள்ள பா.ஜ.க.–வின் வேட்பாளருக்கு ஆதரவு அளிப்பதற்கு முன்பாக, இந்த 'NEET' தேர்வு மசோதாவுக்கு ஒப்புதலைப்*

*பெற அழுத்தம் கொடுத்திருக்கலாம். அதையும் இந்த அரசு செய்யவில்லை. மருத்துவக் கவுன்சிலிங் முடிந்த பிறகு, பொறியியல் கவுன்சிலிங் நடப்பதுதான் வழக்கம். ஆனால், இந்த முறை 'NEET' தேர்வு குழப்பத்தால், மருத்துவக் கவுன்சிலிங் தடைபட்டிருக்கிறது. ஆனால், பொறியியல் கவுன்சிலிங் நேற்றிலிருந்து நடக்கத் தொடங்கியிருக்கிறது. ஆகவே, மாணவர்களுடைய எதிர்காலம் பாதிக்கப்பட்டிருக்கிறது. பெற்றோர்கள் பெரிய கவலைக்கும், அவதிக்கும் ஆளாகியிருக்கிறார்கள். எனவே, இதற்கெல்லாம் முதல் காரணமாகத் திகழும் மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுக்காதது இந்த அரசுதான் என்பதை நான் இங்கே அழுத்தந்திருத்தமாகப் பதிவு செய்ய விரும்புகிறேன். எனவே, தமிழகத்திற்கு மன்னிக்க முடியாத ஒரு துரோகத்தை மத்திய, மாநில அரசுகள் செய்திருக்கிறது. எனவே, நான் நிறைவாகக் கேட்க விரும்புவது, மத்திய அரசிடம் இருக்கக்கூடிய 'NEET' தேர்வு தொடர்பான இரண்டு மசோதாக்களுக்கு உடனடியாக குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெறுவதற்கான முயற்சிகளிலே நீங்கள் ஈடுபட வேண்டும். ஜனாதிபதித் தேர்தல் முடிந்துவிட்டது. அடுத்து, குடியரசு துணைத் தலைவர் தேர்தல் நடைபெறவிருக்கிறது. எனவே, குடியரசு துணைத் தலைவர் தேர்தலைப் பயன்படுத்தியாவது, இந்த அரசு 'NEET' தேர்வு பிரச்சினையிலே முழு கவனம் செலுத்தி மத்திய அரசுக்கு முழு அழுத்தத்தைத் தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக நான் அரசைக் கேட்டு அமர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசுகின்றபோது, நீதிமன்றத்தில் அரசினுடைய சார்பிலே அழுத்தமான வாதங்களை வைத்து, அதிலே நீங்கள் வெற்றி பெறவில்லை என்ற கருத்தைச் சொன்னார்கள்; அதற்குப் பின்பு, அரசியல் ரீதியாக, நீங்கள் இன்னும் அழுத்தம் கொடுக்க வேண்டுமென்று, இரண்டு கருத்துகளை அவர் முன்வைத்திருக்கிறார். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவிப்பது என்னவென்றால், 85 சதவிகிதம், 15 சதவிகிதம் என்ற அடிப்படையில், எல்லோரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய அளவில் ஓர் அரசாணையை*

*2017 ஜூலை 18*] **[டாக்டர் சி. விஜய பாஸ்கர்]**

*நாங்கள் பிறப்பித்தோம். அந்த அரசாணையைப் பிறப்பிப்பதற்கு முன்பேகூட, சட்ட வல்லுநர்களோடு மிகத் தீவிரமாகக் கலந்தாலோசித்தோம். ஏற்கெனவே, இரண்டு மசோதாக்களுக்கு சட்டமன்றத்திலே ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, மத்திய அரசு அதிலே இன்னும் இறுதி முடிவு எடுக்காத நிலையில், அந்த இரண்டு மசோதாக்களையும்* dilute *செய்துவிடக்கூடாது என்ற அடிப்படையில், மிகுந்த கவனத்தோடுதான் நாம் இந்த விஷயத்தை அணுக வேண்டும்.*

*முற்பகல் 11–25*

*அதற்குப் பின்னாலே, மாநில வழிக் கல்வி படித்த,* State Board–*ல்* Biology *படித்த மாணவர்களுக்கு 85 சதவிகித இட ஒதுக்கீடு என்றும்,* CBSE and Other Board–*ல் படித்த மாணவர்களுக்கு 15 சதவிகித இட ஒதுக்கீடு என்றும் அரசாணை போடப்பட்டது. இந்த அரசாணையை எதிர்த்து தமிழ்நாட்டிலிருந்து 15–க்கும் மேற்பட்ட வழக்குகள் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டன. மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு மிகுந்த கவனத்தோடு, கடந்த ஆண்டு, திரு. நாகேஸ்வரராவ், உயர்திரு பி.பி. ராவ், இந்த ஆண்டு நாஃப்டே போன்ற இந்திய அளவில் இருக்கிற மூத்த வழக்கறிஞர்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்பேரில்* engage *செய்து, அவர்கள் மூலமாக அரசின் சார்பில் மிகவும் அழுத்தமான வாதங்களை எடுத்து வைத்தோம். உச்ச நீதிமன்றத்தில் மாண்புமிகு அம்மா அவர்கள் அரசின் சார்பில் மூத்த வழக்கறிஞர்கள் மூலமாக அழுத்தமான வாதங்களை வைத்ததன் அடிப்படையில்தான்* State Board–*ல்* Biology *படித்த மாணவர்கள் குறித்து போடப்பட்ட 15–க்கும் மேற்பட்ட வழக்குகளில் உச்ச நீதிமன்ற நீதிபதிகள் தமிழக அரசாணைக்குத் தடை விதிக்கவில்லை. 'இதற்கு நாங்கள்* stay *கொடுக்க முடியாது, நீங்கள் உயர் நீதிமன்றத்தில் போய் பார்த்துக்கொள்ளுங்கள்' என்று வழக்கை* dispose *செய்தார்கள். அந்த இடத்தில் அரசு மிகுந்த கவனத்தோடும், எச்சரிக்கையோடும் செயல்பட்டது. உயர் நீதிமன்றத்தில்* dispose *செய்து கொள்ளுங்கள் என்று சொன்னதற்குப் பிறகு, மீண்டும் 15–க்கும் மேற்பட்ட வழக்குகள் இங்கே உயர் நீதிமன்றத்தில்* Single Judge *முன்பு விசாரணைக்கு வந்தது. உயர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தபொழுது மாநில அரசின் சார்பில் மூத்த வழக்கறிஞரான*

Advocate General *அவர்கள், அன்றைக்கு உடல்நலம் சரியில்லாமல் இருந்தபோதிலும்கூட, அரசினுடைய சார்பில் அரைநாள் முழுக்க அரசின் வாதங்களை எடுத்துச் சொன்னார்கள். என்ன காரணத்திற்காக இந்த அரசாணை பிறப்பிக்கப்பட்டது என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். எதிர்க்கட்சித் தலைவர் சொன்னவாறு 4.2 இலட்சம் பேர்* State Board *பாடத் திட்டப்படி படித்த மாணவர்கள்; 4,675 பேர்* CBSE *மூலம் படித்தவர்கள்.* According to the ratio *போட்டிருந்தால் 5 சதவிகிதம்* CBSE *மற்றும்* Other Board–*க்கும்,* State Board–*க்கு 95 சதவிகிதம் என்றும் போட்டிருக்க வேண்டும். இருந்தாலும், கூடுதலாக 10 சதவிகிதம் சேர்த்து 15 சதவிகிதம்* CBSE *மாணவர்களுக்கு ஏன் கொடுத்தோம் என்று சொன்னால், இதுபோன்று நீதிமன்றத்திற்குச் சென்று வழக்கு தொடுத்து தடை ஆணை பெற்றுவிடக்கூடாது என்பதற்காகத்தான். எனவே,* ratio-*படி போடாமல்,* CBSE *மாணவர்களுக்கும் முக்கியத்துவம் கொடுக்கிறோம், வழக்கிற்கு போய்விடக்கூடாது, அரசாணைக்கு ஒத்துழைப்புக் கொடுக்க வேண்டுமென்று இந்த மாமன்றத்தின்மூலம் கேட்டுக்கொண்டு, 15 சதவிகிதம்* CBSE *மாணவர்களுக்குக் கொடுத்தோம். அதையும் தாண்டி வழக்கிற்குச் சென்றனர். யார் வழக்கில் வாதிட்டார்கள் என்பது எல்லாம் உங்களுக்குத் தெரியும். அதை நான் சொல்லவில்லை. இன்றைக்கு எங்களுக்கும் வேதனையாக இருக்கிறது.* Supreme Court–*ல் நாம் அதற்குத் தடை ஆணை பெறவில்லை. உயர் நீதிமன்றத்தில்* Single Judge *தடை ஆணை கொடுத்துள்ளார். உடனே, அடுத்த நிமிடமே,* appeal *செய்வோம் என்று சொல்லி, நேற்று மேல்முறையீடு செய்யப்பட்டிருக்கிறது;* Appeal *செய்யப்பட்டிருக்கிறது. இன்னும் நமக்கு* time *இருக்கிறது.* Counselling *நான்கு நாட்கள் தள்ளிப்போனால்கூட இந்த நிலையைத் தக்க வைக்க வேண்டும் என்பதில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசும் இன்றுவரை, இந்த நிமிடம் வரை உறுதியாக இருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) இதில் எந்த மாற்றமும் இல்லை. இந்த வழக்கு நிலுவையில் இருக்கிறது.* Bench–*ல் நாம்* appeal *செய்திருக்கிறோம். இன்னும் நாம் வாதிட்டு நல்ல தீர்ப்பைப் பெறுவதற்கான வாய்ப்பு இருக்கிறபொழுது, இது முடிந்துவிட்டது என்பது போன்ற ஒரு செய்தியை வெளியிட வேண்டாம். இதற்கு நடுவில் பல்வேறு கட்சித் தலைவர்கள்* NEET–*ஐப் பற்றி பல்வேறு கருத்துகளைத் தெரிவித்திருக்கிறார்கள். இங்கே இருக்கக்கூடிய ஒரு கட்சியைச் சேர்ந்த ஒரு முன்னாள்*

2017 ஜூலை 18] **[டாக்டர் சி. விஜய பாஸ்கர்]**

அமைச்சருடைய மனைவிதான் 15 வழக்குகளுக்கும் சேர்த்து, CBSE மாணவர்களுக்காக, மாநில மாணவர்களின் நலனுக்கு எதிராக வாதிடுகிறார்கள். ஆனால், அதே கட்சியின் தலைவர் வெளியில் சொல்கிறார், தமிழ்நாடு அரசு சரியாக வாதங்களை முன்வைக்கவில்லை என்று. தமிழ்நாடு அரசின் சார்பாக State Board–ல் Biology மாணவர்களுக்காக வழக்கு மன்றத்தில் வாதிட்டது யார்? யாருமே வரவில்லை. தமிழ்நாடு அரசு மட்டும்தான் அந்த மாணவர்களுக்குத் துணை நின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) வேறு யாராவது துணை நின்றார்களா? யார் துணை நின்றது? நீங்கள் சொல்லுங்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அரசியல் காரணங்களுக்காக ஒவ்வொருவரும் வெளியில் ஓர் அறிக்கையைக் கொடுக்கிறார்கள். வழக்கு நீதிமன்றத்திற்கு வரும்போது யார் அங்கே வாதிடுகிறார்கள்? என்ன நடந்து கொண்டிருக்கிறது? யார் வாதத்தை முன்வைக்கிறார்கள்? மாநிலக் கல்வி படித்த, தமிழகத்திலிருக்கக்கூடிய இந்த மாணவர்களின் நிலையை யார் எடுத்துச் சொல்வது? தமிழக அரசு மட்டும்தான் தொடர்ந்து எடுத்துச் சொல்கிறது. இன்னும் நான் அன்போடு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குச் சொல்கிறேன்; Ground reality என்ன? Supreme Court Bench தீர்ப்பின் அடிப்படையில் இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டது. 2010 ஆம் ஆண்டு நீங்கள் ஆளுங்கட்சியாக இருந்த காலகட்டத்தில்தான் M.C.I.–ல் notification போடுகிறார்கள். இப்பொழுது நீங்கள் சொல்கிறீர்கள், ஜனாதிபதி தேர்தல் வந்திருக்கிற இந்த நேரத்தில் அழுத்தம் கொடுத்திருக்கலாமே என்று. நான் உங்களைக் கேட்கிறேன், 2010 ஆம் ஆண்டு நீங்கள் ஆளுங்கட்சியாக இருந்தீர்கள். உங்களுடைய கூட்டணிக் கட்சி காங்கிரஸ், மத்தியில் ஆளுங்கட்சியாக இருந்தது. அப்பொழுது M.C.I.–ல் notification போடுகிறார்கள்; '+2 மார்க் அடிப்படையில் இனிமேல் மாணவர் சேர்க்கையை நடத்த முடியாது, NEET தேர்வு அடிப்படையில்தான் நீங்கள் இனிமேல் admission போடவேண்டும்' என்று சொல்லப்பட்டது. அன்றைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களும் இதே கேள்வியைத்தான் கேட்டார்கள்; 'நீங்கள் மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுத்து M.C.I. notification–ஐ தடை செய்திருக்கலாம் அல்லது குறைந்தபட்சம் தமிழ்நாட்டுக்கு M.C.I. notification–லிருந்து விலக்கு பெற்றிருக்கலாமே' என்று மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கேட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு இந்த நிமிடம் வரை பதில் இல்லை. ஆக, நான் இந்தச் சட்டமன்றத்தில் சொல்கிறேன்,

*தும்பை விட்டது திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அரசு. இப்பொழுது வாலைப் பிடித்து ஒற்றைக் காலில் இழுத்துக் கொண்டிருக்கிறது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு நீட் தேர்வை எல்லா மாநிலங்களும் ஏற்றுக் கொண்டுவிட்டன. ஏன் குஜராத் மாநிலமே ஏற்றுக் கொண்டுவிட்டது. குஜராத் மாநிலமே* NEET*–ஐ* accept *செய்துள்ளார்கள். பிற்படுத்தப்பட்ட மாநிலமாக இருக்கக்கூடிய பீகார் மாநிலம் உள்ளிட்ட சிறிய மாநிலங்கள் அனைத்தும்* NEET*–ஐ* accept *செய்துள்ளனர். ஆனால், இந்த நிமிடம் வரை நாம் ஒத்துக்கொள்ளாமல்,* NEET*–லிருந்து தமிழக மாணவர்களுக்கு விலக்கு அளிக்க வேண்டுமென்று அரசியல் அழுத்தம், சட்டப் போராட்டம் நடத்தி, தொடர்ந்து அழுத்தம் கொடுத்துக் கொண்டிருக்கின்ற ஒரே அரசு, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு. (மேசையைத் தட்டும் ஒலி)*

*முற்பகல் 11–30*

*நேற்றுகூட, என்னையும் சுகாதாரத் துறை அரசுச் செயலாளரையும் டில்லி செல்ல மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பணித்துள்ளார்கள். நாளையதினம் சட்டமன்றக் கூட்டத் தொடர் முடிந்த பின்னர், நாளை மாலையே டில்லி செல்கிறோம். மீண்டும் நீங்கள் மத்திய அரசிடம் அழுத்தம் கொடுக்கச் சொன்னீர்கள், அதற்காகச் செல்கிறோம். இவ்வாறு நாங்கள் தொடர்ந்து அழுத்தம் கொடுத்துக் கொண்டிருக்கிறோம்.*

*மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் மாசிலாமணி அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் முனைவர் பொன்முடி அவர்களும் இதுகுறித்துச் சொன்னார்கள்.* NEET *வந்ததால்தான்,* P.G. seat*-ல் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மருத்துவ மாணவர்கள் மேற்படிப்பு படிக்க முடியவில்லை என்று சொன்னார்கள். இதுகுறித்த ஒரே ஒரு கருத்தை மட்டும் சொல்லி விடுகிறேன்.*

*மாண்புமிகு உறுப்பினர்கள், நாகப்பட்டினத்தில் மருத்துவர்களை நியமிக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். அதேபோன்று இராமநாதபுரத்தில் மருத்துவர்களை நியமிக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். அரசு வேகமாக மருத்துவர்களை நியமிக்கிறது. அரசு மருத்துவர்களை உடனே நியமிக்க வேண்டுமென்று நீதிமன்றம்தான் சொல்கிறது. அதே நீதிமன்றத்தில்* counselling *முடிந்த பிறகு மருத்துவர்களை நியமிக்கக்கூடாது*

*என்று தடையாணையும் பிறப்பிக்கப்படுகிறது. நாங்கள் என்ன செய்ய முடியும்? இதற்காக நாங்கள் வாதாடுகிறோம். நீதியரசர்கள் சொல்லும் கருத்தை நாங்கள் ஏற்றுக்கொண்டாக வேண்டும். உச்ச நீதிமன்ற நீதியரசர்கள் சொல்கிற கருத்தை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். 2,224 மருத்துவர்கள் நியமனம் செய்யப்படுவார்கள் என்று நாங்கள் சொல்கிறோம். நேற்று* High Court *கிளையில் அதற்கு* stay *கொடுத்திருக்கிறார்கள். அரசுக்கு இவ்வளவு இடர்ப்பாடுகள் இருந்தாலும்கூட, இவற்றையெல்லாம் தாண்டி, மூத்த வழக்கறிஞர்களை வைத்து, நீதிமன்றத்தில் அரசினுடைய நிலைப்பாட்டை நாம் எடுத்துச் சொல்கிறோம். அரசின் உணர்வுகளை நாம் எடுத்துச் சொல்கிறோம். இந்த அரசாணை என்பது அரசினுடைய கொள்கை முடிவு. இந்த அரசின் கொள்கை முடிவில் வேறு யாரும் தலையிட முடியாது. இன்னென்ன காரணங்களுக்காக, மாநில உரிமையை நிலைநாட்டக்கூடிய முறையில், மேதகு குடியரசுத் தலைவரிடம் இரண்டு மசோதாக்கள்* pending *இருக்கின்ற இந்த நேரத்தில், அதை* dilute *செய்ய முடியாத வகையில், மாணவர்களின் உணர்வுகளைப் புரிந்து கொண்டிருக்கின்ற அரசு, இதுபோன்று மருத்துவக் கல்வி மாணவர் சேர்க்கையில் 85:15 என்ற விகிதத்தில் சேர்க்கை நடைபெறவிருக்கிறது என்ற வாதத்தை நாம் சிறப்பாக எடுத்து வைத்திருக்கிறோம்.*

*இன்னும் நமக்கு வாய்ப்பு இருக்கிறது. இந்த வழக்கு உயர் நீதிமன்ற* Bench*–ல் வருகிறது. மூத்த வழக்கறிஞரான நம்முடைய* Advocate General*–ஐ வைத்து வாதாட இருக்கிறோம். இதில் வாதிட்டு, நிச்சயமாக நல்ல தீர்ப்பைப் பெறுவோம் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது. அதற்கு முன்னர், நீங்கள் கருத்துகளை அள்ளித் தெளிக்க வேண்டாம் என்பதை மட்டும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.* (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதற்குமேல் இதில் விவாதம் வேண்டாம். (குறுக்கீடுகள்) இதில் விவாதம் வேண்டாம். (குறுக்கீடு) *சரி, சொல்லுங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

**திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இருந்தபோது, மத்திய அரசில் உங்கள் கூட்டணி ஆட்சி இருந்தபோது என்ன*

செய்தீர்கள் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு கேள்வியைக் கேட்டிருக்கிறார். அதற்கு ஒரு விளக்கத்தை நான் தர விரும்புகிறேன்.

மருத்துவக் கல்விக்கு NEET என்ற நுழைவுத் தேர்வு நடத்துவது குறித்து 21–12–2010–ல் மருத்துவக் கவுன்சில் ஓர் அறிக்கையை வெளியிட்டது. தேர்தலை சந்திப்பதற்கு முன்பு, இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்கு முன்பு இந்த அறிவிப்பு வந்தாலும், மாணவர்களின் நலன் கருதி, அன்றைக்கு முதலமைச்சராக இருந்த தலைவர் கலைஞர் அவர்கள், மத்தியிலே மாண்புமிகு மத்திய சுகாதாரத் துறை அமைச்சராக இருந்த திரு. குலாம்நபி ஆசாத் அவர்களுக்கு இதை எதிர்த்து அப்போதே கடிதம் எழுதியிருக்கிறார். அத்துடன் மட்டுமன்றி, உடனடியாக தமிழக அரசின் சார்பில் சென்னை உயர் நீதிமன்றத்திலே வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, மருத்துவக் கவுன்சிலின் NEET தேர்வு அறிக்கைக்குத் தடை பெறப்பட்டிருக்கிறது. தி.மு.க. அரசு இருந்தவரை NEET நுழைவுத் தேர்வு இங்கு வரவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்ல, தி.மு.க. அரசு தொடர்ந்த வழக்கு, ஆந்திர மாநில அரசு தொடர்ந்த வழக்கு, தனியார் மருத்துவக் கல்லூரிகள் அனைவரும் அந்தந்த உயர் நீதிமன்றங்களில் தொடர்ந்த வழக்குகள் அனைத்தும் உச்ச நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டன. அந்த வழக்கில்தான் 18–7–2013 அன்று உச்ச நீதிமன்றம் NEET நுழைவுத் தேர்வு செல்லாது என்று அறிவித்தது என்பதை நான் இந்த அவையில் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். ஆகவே, தி.மு.க. பங்கேற்றிருந்த ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு இருந்தவரை, தமிழகத்தில் NEET நுழைவுத் தேர்வு நுழையவில்லை என்பதுதான் வரலாறு. (மேசையைத் தட்டும் ஒலி)

நீங்கள் சொன்ன காரணத்தால்தான் விளக்கிச் சொல்லியிருக்கிறேன். இப்போது இருக்கின்ற சூழ்நிலையில் நாம் நீதிமன்றத்தை நம்ப முடியாது. ஏனென்றால், இன்றைக்கு ஏழையெளிய மாணவர்கள், கிராமப் பகுதிகளில் இருக்கக்கூடிய மாணவர்கள் எந்த அளவிற்குப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது உங்களுக்குத் தெரியும். எனவே, நான் கேட்கின்ற கேள்வி, ஜனாதிபதி அவர்களுக்கு அனுப்பி வைத்த, இந்த அவையிலே ஏகமனதாக நிறைவேற்றிய இரண்டு மசோதாக்களுக்கு, ஏன் அழுத்தம் தரவில்லை? அதை ஏன் நேரடியாகச் சென்று கேட்கவில்லை?

*ஜனாதிபதி தேர்தல் வந்தபோது அதற்கு உங்களுக்கு வாய்ப்பு ஏற்பட்டது. அந்த வாய்ப்பை நீங்கள் தவற விட்டுவிட்டீர்கள். எனவேதான், இப்போது குடியரசு துணைத் தலைவர் அவர்களைத் தேர்ந்தெடுக்க தேர்தல் நடைபெறக்கூடிய சூழ்நிலையில் இப்போதாவது அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு, இதை நீங்கள் சரி செய்ய வேண்டும். அதற்குரிய பரிகாரத்தைக் காண வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசினுடைய நிலைமையும், அடுத்து நாம் என்ன செய்ய வேண்டும் என்று அரசு கவனம் செலுத்துகின்ற காரணத்தால் நானும், இந்தப் பிரச்சினைக்குள் செல்ல விரும்பவில்லை. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதுபோல், 2010–ல் நீங்கள் ஆளுங்கட்சியாக இருந்தபோது, அதேநேரத்தில் மத்திய அரசில் காங்கிரஸ் ஆளுங்கட்சியாக இருந்தபோதுதான் முதன்முதலில்* MCI notification–*ஐ போடுகிறார்கள். அதற்கு முன்னர் இந்தத் தேர்வு முறையைக் கொண்டு வரவில்லை. இந்த* notification *போடும்போதே ஏன் எதிர்க்கவில்லை? இந்த* notification *போட்டதால் நீங்கள்* court-*க்குச் சென்றுள்ளீர்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் என்ன கேள்வி கேட்டாலும் நான்* argue *செய்கிறேன். அதை விட்டுவிட்டு நீங்கள் சத்தம் போட்டால் என்ன அர்த்தம்?*

**திரு. எ.வ. வேலு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *திரு. எ.வ. வேலு, உட்காருங்கள்.*

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:** *2010–ல் நீங்கள் ஆளுங்கட்சியாக இருந்தபோது, மத்தியில் காங்கிரஸ் ஆளுங்கட்சியாக இருந்தபோதுதான் இந்திய மருத்துவக் குழுமம்,* MCI *சார்பிலே +2 மதிப்பெண்ணின் அடிப்படையில் மருத்துவப் படிப்பிற்கு மாணவர் சேர்க்கை வேண்டாம், இந்தியா முழுவதும் மருத்துவப் படிப்பிற்கு* NEET *நுழைவுத் தேர்வுமூலம் மாணவர்கள் சேர்க்கப்பட வேண்டுமென்று* notification *கொண்டு வந்தது உங்கள் ஆட்சிக் காலத்தில்தானே!*

**[டாக்டர் சி. விஜய பாஸ்கர்]** *[2017 ஜூலை 18*

*முற்பகல் 11–35*

*அப்போது நீங்கள் ஏன்* exemption *வாங்கவில்லை, ஏன் நீங்கள் அதைத் தடுத்து நிறுத்தவில்லை என்றுதான் நான் கேட்டேன். அதற்குப்பிறகு நீங்கள் கோர்ட்டில் போய்* stay *வாங்கினீர்கள்.* (குறுக்கீடு) *மாண்புமிகு பொன்முடி அவர்களே, நான் பேசி முடித்த பிறகு, நீங்கள் கேள்வி கேளுங்கள், அதற்கு நான் பதில் சொல்கின்றேன்.* (குறுக்கீடு) *13 ஆண்டுகளாக இது சம்பந்தமாக என்ன நடந்து வருகிறது என்று என்னிடம் எல்லா புள்ளிவிவரங்களும் இருக்கின்றன.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர், ஒரு நிமிடம் இருங்கள். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேள்வி கேட்டார். அவர் கேட்ட கேள்விக்கு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிக் கொண்டிருக்கின்றார்.* (குறுக்கீடு) *இல்லை, இப்படியெல்லாம் பேசினால் அது சரியாக வராது. இல்லை, இல்லை, இதெல்லாம் முறையல்ல.* (குறுக்கீடு) *இல்லை, இதெல்லாம் முறையல்ல. இதையெல்லாம் பேசக் கூடாது.* (குறுக்கீடு) *திரு. ரங்கநாதன், நீங்கள் உட்கார்ந்துகொண்டு பேசினீர்களென்றால் நான் நடவடிக்கை எடுத்துவிடுவேன். உட்காருங்கள், அமைதியாக இருங்கள். விவாதம் அமைதியாக போய்க் கொண்டிருக்கின்றது. எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேட்ட கேள்விகளுக்கு மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிக் கொண்டிருக்கின்றார். அதில் ஏதாவது பிரச்சினைகள் இருக்கின்றன என்று சொன்னால், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குப் பேச வாய்ப்புத் தருகின்றேன். அவர் கேள்வி கேட்கலாம். இப்படி நீங்கள் எல்லோரும் கேள்வி கேட்டீர்கள் என்றால் எப்படி நான் வாய்ப்புத் தர முடியும்?* (குறுக்கீடு) *இது முறையல்ல. சரி, திரு. துரைமுருகன் என்னவென்று சொல்லுங்கள்.*

**திரு. துரைமுருகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது பிரச்சினை என்னவென்றால். . .* (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *திரு. துரைமுருகன், சற்று இருங்கள். அவர் இன்னும் பதில் சொல்லி முடிக்கவில்லை. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.* (குறுக்கீடு) *திரு. துரைமுருகன், நீங்கள் இருங்கள். அவர் பதில் சொல்லி முடிக்கட்டும். அதில் ஏதாவது பிரச்சினை*

*2017 ஜூலை 18*] **[பேரவைத் தலைவர்]**

இருந்தால் உங்களுக்குப் பேச நான் வாய்ப்புத் தருகின்றேன், உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை, உங்களுக்குப் பேச வாய்ப்புத் தருகின்றேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிக் கொண்டிருக்கின்றார், அவர் பதில் சொல்லி முடிக்கட்டும். அவர் பதிலை முழுவதுமாக சொல்லி முடிக்கவில்லை, உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2010–ல் இந்திய மருத்துவக் குழுமம்–Medical Council of India முதன்முதலாக இந்தியா முழுவதும் +2 மார்க் அடிப்படையில் நீங்கள் admission போடக் கூடாது, மத்திய தகுதி நுழைவுத் தேர்வு அடிப்படையில்தான் இனிமேல் நீங்கள் மாணவர் சேர்க்கையை நடத்த வேண்டும் என்று சொல்லியது. மாணவர் சேர்க்கையானது சிறப்பாக, வெளிப்படையாக, நேர்மையாக தமிழ்நாட்டில் மட்டுமல்லாமல் பிற மாநிலங்களிலும் ஏற்கெனவே நடந்து கொண்டிருந்த முறையை மாற்றி, புதியதாக இப்போது எல்லோரும் எதிர்க்கக்கூடிய NEET என்ற ஒரு விஷயத்தைக் கொண்டு வந்தது யார்? நீங்கள் ஆளும் கட்சியாக இருந்தபோது மத்திய அரசு கொண்டு வந்தது. அதைத்தான் நான் சொன்னேன். அதை எதிர்த்து நீங்களும் நீதிமன்றத்திற்குப் போய் அப்போது stay வாங்கினீர்கள். அதைத்தொடர்ந்து, மாண்புமிகு அம்மா அவர்களும் அன்றைக்கு காங்கிரஸ் கட்சி ஆட்சியில் இருந்தபோது, பாரதப் பிரதமரிடம் நேரடியாகவும், கடிதம் மூலமாகவும் வலியுறுத்தி இருக்கின்றார்கள், அதன்பின்னால், ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பின்னர் மத்திய அரசில் பாரதீய ஜனதா கட்சி ஆட்சியில் இருந்தபோது நேரில் சந்தித்து அழுத்தம் கொடுத்திருக்கின்றார்கள், இன்றுவரை நம்முடைய மாண்புமிகு மரியாதைக்குரிய முதலமைச்சர் எடப்பாடியார் அவர்களும் ஆட்சிப் பொறுப்பேற்ற பின்னால் பாரதப் பிரதமர் அவர்களிடம் நேரில் சென்று அழுத்தம் கொடுத்திருக்கின்றார்கள், அதேபோல் மாண்புமிகு HRD Minister–மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சர், சட்டத் துறை அமைச்சர், மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் மற்றும் அனைத்துத் துறை அமைச்சர்களையும் பார்த்து தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றோம். அரசியல் ரீதியாக தொடர்ந்து அழுத்தம் கொடுத்துக் கொண்டே இருக்கின்றோம். இதில் எந்தவிதமான மாற்றுக் கருத்தும் கிடையாது. இன்னும் சொல்லப்போனால் இந்தியா முழுவதிலும் எல்லா மாநிலங்களும்

NEET–ஐ ஒத்துக்கொண்டு விட்டார்கள். குஜராத் மாநிலம்கூட NEET தேர்வை ஒத்துக்கொண்டு விட்டார்கள். NEET தேர்வை இந்த நிமிடம் வரை ஒத்துக்கொள்ளாமல் தேசிய தகுதி நுழைவுத் தேர்விலிருந்து விலக்கு வேண்டுமென்று துடித்துக்கொண்டிருக்கின்ற ஒரே மாநிலம் தமிழ்நாடு மட்டும்தான். (மேசையைத் தட்டும் ஒலி) மற்ற எல்லா மாநிலங்களும் ஒத்துக்கொண்டுவிட்டன. அதைத்தான் நான் கேட்டேன், இந்த மாணவர்களுக்காக சட்டமன்றத்தில் ஒரு பேச்சு, வெளியில் கொடுக்கின்ற அறிக்கையில் ஒரு பேச்சு. (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் மாண்புமிகு உறுப்பினர் திரு. ரங்கநாதன் அவர்களைப் பேசச் சொல்லுங்கள். அதற்குப் பிறகு நான் பதில் சொல்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ரங்கநாதன், இதெல்லாம் சரியில்லை, நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர், நீங்கள் பேசி முடித்துவிட்டீர்களா? (குறுக்கீடு) சரி, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலில் இதில் பிரச்சினை என்னவென்று தெரிந்துகொள்ள வேண்டும். இந்த NEET தேர்வை அமல்படுத்த வேண்டும் என்று மத்திய அரசாங்கம் சட்டம் கொண்டு வந்தது. அது இந்தியா முழுவதற்கும் applicable. ஆனால், இதிலிருந்து எங்களுக்கு விதிவிலக்கு அளிக்க வேண்டும் என்று ஒரு மசோதாவை மன்றத்தில் நிறைவேற்றி நாம் அனுப்பினோம். இதனை ஜனாதிபதி வரை இந்த அரசு கொண்டுபோய் இருந்தால் இந்தப் பிரச்சினையெல்லாம் வந்திருக்காது. இந்த வழக்கு போன்றவையும் ஏற்பட்டு இருக்காது. ஜல்லிக்கட்டிற்காகச் சென்று, வெற்றிகரமாக நிறைவேற்றினீர்கள். ஆனால், இந்த மசோதா, ஜனாதிபதிக்குச் செல்லாமல், எங்கேயோ drawer–ல் தூங்கி இருக்கின்றது. அப்படியானால், நீங்கள் இதில் போதிய கவனம் செலுத்தவில்லை. இதில் ஏற்பட்டிருக்கின்ற குழப்பத்திற்கு முழு பொறுப்பு நீங்கள்தான். அந்த மசோதாவைக் கொண்டு போக வேண்டிய இடத்திற்குக் கொண்டு சென்று ஜனாதிபதியிடத்தில் ஒரு exemption வாங்கியிருந்தால், இந்தப் பிரச்சினையே வந்திருக்காது. தமிழ்நாடு இன்றைக்கு இந்த அளவிற்குத் தத்தளித்திருக்காது. எனவே, முழு பொறுப்பையும் ஏற்க வேண்டியவர்கள் நீங்கள். எனவே, நீங்கள் இராஜினாமா செய்வதைத் தவிர வேறு வழி இல்லை, அதுதான் சித்தம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*2017 ஜூலை 18*]

*முற்பகல் 11–40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழக முதலமைச்சர் அவர்கள் பதவியேற்ற உடனேயே முதன் முதலாக மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை சந்தித்தபோது, கிட்டத்தட்ட ½ மணி நேரம் அவர்களுடனான சந்திப்பின்போது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களிடம் வைத்த முதல் கோரிக்கை, இந்த தேசிய தகுதி நுழைவுத் தேர்விலிருந்து தமிழகத்திற்கு விலக்கு அளிக்க வேண்டும் என்ற கோரிக்கைதான். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்குப் பின்னரும், இரண்டாம் முறையாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாண்புமிகு பாரதப் பிரதமரை சந்தித்தபோதும், தேசிய தகுதி நுழைவுத் தேர்விலிருந்து விலக்கு அளிக்க வேண்டும் என்று கேட்டார்கள். இது உங்களுக்குத் தெரியும். இன்னும் சொல்லப்போனால், அதற்குப் பிறகு மத்திய மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள், சென்னை வந்திருந்தார்கள். அவர்களையும் நேரில் சந்தித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அழுத்தம் கொடுத்தார்கள். அதன் பின்னரும், நம்முடைய தலைமைச் செயலாளர் அவர்களிடம் மாண்புமிகு பாரதப் பிரதமருடைய தனிச் செயலாளர், PMO அவர்களை சந்திக்கச் சொல்லி, அழுத்தம் கொடுத்தார்கள். என்னையும், துறைச் செயலாளர் அவர்களையும் புது டில்லிக்கு அனுப்பி, அங்கேயும் அவர்களைச் சந்தித்து, அழுத்தம் கொடுக்கச் சொல்லி, தொடர்ந்து நாங்களும் அழுத்தம் கொடுத்துக் கொண்டிருக்கின்றோம். தமிழகத்தின் சார்பில் மாநிலப் பாடத் திட்டத்தில் படித்திருக்கக்கூடிய மாணவர்களின் உரிமைக்காக அவர்களுடைய நிலைக்காக தொடர்ந்து அழுத்தம் கொடுத்துக் கொண்டிருக்கிறோம்.*

*மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். ஜல்லிக்கட்டுப் பிரச்சினைக்கு விதி விலக்கு வாங்கினீர்கள் என்றும் சொன்னார்கள். ஜல்லிக்கட்டுப் பிரச்சினை என்பது, அது எப்படி தமிழகத்தில் இருந்தது என்பது உங்களுக்கே தெரியும். தமிழக மக்கள் அனைவரின் உணர்வுகளை*

**[டாக்டர் சி. விஜய பாஸ்கர்]** [*2017 ஜூலை 18*

*வெளிப்படுத்தக்கூடிய ஒரு பெரிய போராட்டமாக ஆகி, அந்த உணர்வுகளெல்லாம். . . (குறுக்கீடுகள்) சொல்லிவிடுகிறேன், சொல்லி முடித்துவிடுகிறேன். (குறுக்கீடுகள்) ஆனால், NEET என்பது, இந்தியா முழுவதுக்குமான பிரச்சினை. தமிழகத்திற்கு மட்டுமல்ல. ஜல்லிக்கட்டுப் பிரச்சினை நம் தமிழக மக்களுடைய வீர விளையாட்டு. ஆனால், NEET என்பது இந்தியா முழுவதற்குமாக கொண்டு வரப்பட்ட சட்டம். அது எந்த அடிப்படையில் கொண்டு வரப்பட்ட சட்டம்? மத்திய அரசு கொண்டு வந்த சட்டமா அல்லது மாநில அரசால் கொண்டு வரப்பட்ட சட்டமா? 2010 ஆம் ஆண்டில் MCI notification அடிப்படையில், ஒவ்வொரு மாநிலத்திலிருந்தும் பல்வேறு வழக்குகள் உச்ச நீதிமன்றத்தில் பெறப்பட்டு, அவை அனைத்தும் உச்ச நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, உச்ச நீதிமன்றத்தில் திரு. தவே என்பவர் உச்ச நீதிமன்றத்தில் நீதிபதியாக இருந்தபோது SANKALP என்ற தொண்டு நிறுவனத்தால் போடப்பட்ட வழக்கின் அடிப்படையில் Suo motu ஆக இந்த வழக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, உச்ச நீதிமன்ற Bench–ல் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில், ஏற்கெனவே இந்த NEET தேர்வை quash செய்து, மாண்புமிகு அம்மா அவர்கள் தீர்ப்பைப் பெற்றுக்கொடுத்தார்கள். தீர்ப்பை நாட்டிற்குப் பெற்றுக் கொடுத்தவர், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்குப் பிறகு SANKALP என்ற தொண்டு நிறுவனம், மறுபடியும் இன்னொரு வழக்கைத் தொடர்கிறார்கள். நீதிபதி திரு. தவே அவர்கள் SANKALP என்ற தொண்டு நிறுவன வழக்கைத் தானாகவே எடுத்துக்கொண்டு, தானாகவே விசாரித்தது. மீண்டும் உச்ச நீதிமன்றத்தின் உயர் அமர்வில் விசாரிக்கப்பட்டு, இனிமேல் NEET என்பதுதான், உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பாக உள்ளது. ஆக, உச்ச நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில்தான், இந்த நிகழ்வு நடந்து கொண்டிருக்கிறது. தாங்கள் தயவுசெய்து இதைப் புரிந்துகொள்ள வேண்டும். உச்ச நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில் இந்தியா முழுவதும் நடந்து கொண்டிருக்கும் ஒரு விஷயத்தில், தமிழகத்தில் மட்டும் அழுத்தம் கொடுக்கவில்லையென்று சொல்வது எந்த விதத்தில் நியாயம் என்பது தெரியவில்லை. அரசியலுக்காக அல்லது வெளியில் விடும் அறிக்கைக்காக ஒவ்வொருவரும் தங்களுடைய நிலைப்பாட்டைச் சொல்கிறார்கள். பத்திரிகைக்கு இன்று என்ன அறிக்கை கொடுக்கலாம் என்பதற்கு இன்றைக்கு உங்களுக்கு NEET கிடைத்திருக்கிறது அல்லது உங்களுக்கு இன்றைக்கு வேறு ஒரு சம்பவம் கிடைத்திருக்கிறது. நாளைக்கு என்ன சம்பவம்*

*2017 ஜூலை 18]* **[டாக்டர் சி. விஜய பாஸ்கர்]**

கிடைக்கும் என்று எண்ணிக் கொண்டிருப்பவர்கள்தான் இன்றைக்குத் தலைவராக இருந்துகொண்டு வெளியில் அறிக்கை கொடுக்கிறார்கள். நாங்கள் நெஞ்சுறுதியோடு சொல்கின்றோம், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் இந்த அரசு தொடர்ந்து போராடிக் கொண்டிருக்கின்றது. அரசியல்ரீதியாக அழுத்தம் கொடுத்துக் கொண்டிருக்கின்றது. (குறுக்கீடுகள்) இதுவே மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்முடி அவர்களும். . . (குறுக்கீடுகள்)

*முற்பகல் 11–45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லி முடிக்கட்டும். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் இதையெல்லாம் பேசக்கூடாது. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இவையெல்லாம் அவைக்குறிப்பில் வராது. (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை. (குறுக்கீடுகள்) நீங்கள் கேட்ட கேள்விகளுக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) விவாதம்தான் நடக்கின்றது. (குறுக்கீடுகள்) இல்லை. (குறுக்கீடுகள்) நீங்கள் எந்த அளவிற்குக் கேள்வி கேட்டீர்களோ, அதே அளவிற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களும் பதில் சொல்லியிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) இதில் ஒன்றும் மாற்றுக் கருத்து இல்லை. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள். உட்காருங்கள். இல்லை, இந்தப் பிரச்சினை அவ்வளவுதான். நீங்கள் இதற்கு மேல் விவாதிக்க முடியாது, (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் மறுபடியும் ஏதாவது கேள்வி கேட்க வேண்டுமென்றால், கேட்க வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்) அமைதியாக இருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் கேள்வி கேட்டீர்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார். அதில், மாற்றுக் கருத்து ஏதாவது இருந்தால் மட்டுமே நீங்கள் தெரிவிக்கலாம். நீங்கள், அவையை நடத்துவதற்கு ஒத்துழைப்புத் தராமல் இப்படி செய்வது முறையல்ல. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். NEET தேர்வு குறித்து ஏற்கெனவே அதிக நேரம் விவாதம் செய்யப்பட்டு விட்டது. இதில் மேற்கொண்டு பேச இன்னும் என்ன இருக்கிறது? (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், ஒரு நிமிடத்தில் சொல்லுங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் சில விளக்கங்களைக் கேட்கிறோம். பிரச்சினைகளை எப்படி சரிசெய்ய வேண்டுமென்று கருத்துகளைச் சொல்கிறோம். அது எதிர்க்கட்சியினுடைய கடமை. நடைபெற்றுக் கொண்டிருக்கக்கூடிய போராட்டங்கள் மற்றும் அங்கே இருக்கக்கூடிய பிரச்சினைகளை சுட்டிக் காட்டுகிறோம். அதற்குப் பதில் சொல்ல வேண்டிய இடத்தில் நீங்கள் இருக்கிறீர்கள். ஆனால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள், ஏதோ போராட்டங்களை நாங்கள் தேடி அலைந்து கொண்டிருப்பது போலவும், எங்கெங்கே என்ன செய்திகள் கிடைக்கும், எதை வைத்துப் பேசலாம், எதை வைத்துப் பிழைப்பு நடத்தலாம் என்பது போலப் பேசுவது பொருத்தமாக இல்லை. எனவே, அதை அவைக் குறிப்பிலிருந்து தயவுகூர்ந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிடுவது போல, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் யாரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர்கள் அமைதியாக இருங்கள். (குறுக்கீடுகள்) அமைதியாக இருங்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யாரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** யாரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்று record ஆகியிருக்கிறது. நீங்கள் ஏன் கவலைப்படுகிறீர்கள்? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர், நீங்கள் பேசுங்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் பேசும்போது ஏன் நீங்கள் இராஜினாமா செய்யவில்லை

*2017 ஜூலை 18]* **[திரு. கே.ஏ. செங்கோட்டையன்]**

*என்று கேட்டார். NEET தேர்வு குறித்த சட்டம் கொண்டுவரும்போது காங்கிரஸ் கட்சியின் கூட்டணியில் இடம் பெற்று, மந்திரி சபையிலும் நீங்கள் இடம் பெற்றிருந்தீர்கள். அன்றைக்கு அதை எதிர்த்து நீங்கள் ஏன் இராஜினாமா செய்யவில்லை? கடிதம் எழுதினீர்கள், வழக்கு போட்டீர்களே தவிர, அன்றைக்கு நீங்கள் ஏன் இராஜினாமா செய்யவில்லை?*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** NEET தேர்வு குறித்த விவாதம் போதும். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். இந்த விவாதம் போதும். (குறுக்கீடுகள்) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், நான் அடுத்த நிகழ்ச்சி நிரலுக்குச் செல்ல வேண்டும். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இந்த விவாதம் போதும். (குறுக்கீடுகள்) இதற்குமேல் நான் அனுமதிக்க முடியாது. (குறுக்கீடுகள்) இதற்கு மேல் நான் அனுமதிக்க முடியாது. (குறுக்கீடுகள்) நேரமில்லை, தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நிறைய பிரச்சினைகளைக் குறித்து விவாதம் செய்ய வேண்டியுள்ளது. தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். நீங்கள் கேட்டதற்குத்தான் மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் பதில் அளித்திருக்கிறார். (குறுக்கீடுகள்) நீங்கள் கேட்டதற்குத்தான் மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் பதில் அளித்திருக்கிறார். (குறுக்கீடுகள்) மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் இராஜினாமா செய்ய வேண்டுமென்று சொன்னார். அதற்கு, மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் மறுத்து பதில் சொல்லியிருக்கிறார், அவ்வளவுதான். (குறுக்கீடுகள்) இதில் ஒன்றும் தவறு இல்லை. (குறுக்கீடுகள்) நீங்கள் பேசியதும் அவைக் குறிப்பில் இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்த விளக்கமும் அவைக் குறிப்பில் இருக்கிறது. (குறுக்கீடுகள்) மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் பேசியதும் அவைக் குறிப்பில் இருக்கின்றது. மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் பேசியதும் அவைக் குறிப்பில் இருக்கின்றது. (குறுக்கீடுகள்) அவ்வளவுதான், இந்த விவாதம் இதோடு முடிவுற்றது. (குறுக்கீடுகள்) இதற்கு மேல் நான் அனுமதிக்க முடியாது. (குறுக்கீடுகள்) வேறு ஏதாவது விஷயம் இருந்தால் அதுகுறித்துப் பேசுங்கள். (குறுக்கீடுகள்) NEET தேர்வு சம்பந்தமாகப் பேசுவதற்கு நான் அனுமதிக்க முடியாது. (குறுக்கீடுகள்) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் NEET தேர்வு சம்பந்தமாகப் பேசுவதற்கு நான் அனுமதிக்க மாட்டேன். (குறுக்கீடுகள்) NEET தேர்வு சம்பந்தமாகப் பேசுவதற்கு நான் அனுமதிக்க மாட்டேன். (குறுக்கீடுகள்) இதற்குமேல் விவாதம் இல்லை.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு நிமிடம். எங்களுடைய கண்டனத்தைத் தெரிவித்துக் கொண்டு வெளிநடப்புச் செய்கிறோம். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள், கூட்டணிக் கட்சியில் இருந்தபோது அப்போது நீங்கள் ஏன் எதிர்க்கவில்லை, இராஜினாமா செய்யவில்லை என்று கேட்டிருக்கிறார். நல்ல கேள்வி. அதற்கு நான் ஏற்கெனவே பதில் சொல்லியிருக்கிறேன். அதை நாங்கள் எதிர்த்திருக்கின்றோம், நீதிமன்றத்திற்குச் சென்று தடை உத்தரவும் பெற்றிருக்கின்றோம் என்று ஏற்கெனவே நான் தெரிவித்திருக்கிறேன். (குறுக்கீடு) தடை உத்தரவு பெற்றிருக்கிறோம். ஆனால், நீங்கள் என்ன செய்திருக்கிறீர்கள்? (குறுக்கீடுகள்) பாராளுமன்றத்தில் அப்போது சட்டமும் கொண்டு வரப்படவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், விவாதம் போதும். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் கேட்டதற்கு, நீங்கள் பதில் சொல்லிவிட்டீர்கள். NEET தேர்வு குறித்த விவாதம் போதும், உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் பேசிய அந்த வார்த்தையை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்ற கோரிக்கை ஒன்றை உங்களிடம் வைத்தேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சொன்ன மறுப்பும் இருக்கிறது. (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்த பதிலும் அவைக் குறிப்பில் இருக்கின்றது. (குறுக்கீடுகள்) அதை நீக்க வேண்டிய அவசியம் இல்லை.

**திரு. மு.க. ஸ்டாலின்:** அதுதான் உங்களுடைய தீர்ப்பா? (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதில் ஒன்றும் இல்லை. அவ்வளவுதான். (குறுக்கீடுகள்) அதோடு விட்டுவிடுங்கள். (குறுக்கீடு)

**திரு. மு.க. ஸ்டாலின்:** NEET தேர்வு பிரச்சினை குறித்து செய்ய வேண்டியதை முறையாக செய்யாத காரணத்தாலும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதில் எங்களுக்கு திருப்தியாக இல்லாத காரணத்தினாலும், இதைக் கண்டித்து, எங்களுடைய

*கண்டனத்தைத் தெரிவிக்கக்கூடிய வகையில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நாங்கள் வெளிநடப்புச் செய்கின்றோம்.*

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

*முற்பகல் 11–50*

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் NEET தேர்வு பற்றி குறிப்பிட்டு, இந்த அரசு இராஜினாமா செய்ய வேண்டுமென்று தெரிவித்திருக்கிறார். எங்களது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அன்றைக்கு பாரதப் பிரதமராக இருந்த திரு. வாஜ்பாய் அவர்களுக்கு ஆதரவு தெரிவித்தபோது, குறைந்தபட்ச செயல் திட்டத்தின்படி, தமிழகத்தின் நலத் திட்டங்களை பாதுகாக்கும் வகையில், நிபந்தனையின் அடிப்படையில்தான் ஆதரவு கொடுத்தார்கள். குறிப்பாக, காவேரி நதி நீர்ப் பிரச்சினைக்கு மத்திய அரசு உதவி செய்ய வேண்டும் என்று சொல்லப்பட்டது. எப்போது, வாஜ்பாய் அரசாங்கம் குறைந்தபட்ச செயல் திட்டத்தினை செயல்படுத்தவில்லையோ, அரசே கவிழ்ந்தாலும் சரி என்று சொல்லி, அன்றைக்கு அந்த அரசுக்குக் கொடுத்த ஆதரவை வாபஸ் பெற்ற தலைவர் மாண்புமிகு அம்மா அவர்கள். தமிழகத்தினுடைய நலனுக்காக வாபஸ் பெற்றது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு. ஆனால், இவர்கள் ஆட்சியில், மத்தியில் அமைச்சர்களாக இருந்தபோதுதான் NEET தேர்வு திட்டத்தினை முதன்முதலாக இந்தியாவிற்கு அறிமுகப்படுத்தினார்கள். உண்மையிலேயே உங்களுக்கு தமிழகத்தின்மீது அக்கறை இருந்திருந்தால், இன்றைக்குப் பேசுகின்ற, வாய் சவடால் விடுகின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தினர் அன்றைக்கே இராஜினாமா செய்திருந்தால் இன்றைக்கு இந்தத் தேர்வு தமிழக மக்கள்மீது திணிக்கப்பட்டிருக்காது. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. சுதர்சனம் என்ன பிரச்சினை குறித்து கேட்க வேண்டும் என்று சொல்கிறீர்கள், சொல்லுங்கள். நீங்கள் வெளிநடப்புச் செய்தீர்களா, இல்லையா? (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள்.*

[2017 ஜூலை 18

**திரு. எஸ். சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளிநடப்புச் செய்துவிட்டு உள்ளே வந்துவிட்டேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சுதர்சனம், உட்காருங்கள். ஒரு நிமிடம் இருங்கள். (குறுக்கீடுகள்) NEET பிரச்சினை என்றால் அதற்கு அனுமதி இல்லை. (குறுக்கீடுகள்) வேறு என்னவென்று சொல்லுங்கள்.

**திரு. கரி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களும், செயலாளர் அவர்களும் இத்திட்டம் தமிழகத்திற்கு வராது என்று சொன்னார்கள். ஆனால், இப்போது நீதிமன்றத்திலே நமக்கு. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு காங்கிரஸ் சட்டமன்றக் குழுத் தலைவர் திரு. இராமசாமி, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) நான் ஆரம்பத்திலேயே உங்களுக்குச் சொல்லிவிட்டேன். (குறுக்கீடுகள்) மீண்டும் நான் அமைச்சர் அவர்களைப் பதில் சொல்ல அழைக்க முடியாது. (குறுக்கீடுகள்) இதுகுறித்து விளக்கமாக நீண்டநேரம் விவாதம் நடந்துவிட்டது. (குறுக்கீடுகள்) NEET குறித்து நீங்களும் கேட்கிறீர்கள் என்று நான் பதிவு செய்துகொள்கிறேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர், திரு. தமிமுன் அன்சாரி அவர்களும் கேள்வி கேட்கிறீர்கள் என்று நான் அவைக் குறிப்பில் பதிவு செய்துகொள்கிறேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. சுதர்சனம் அவர்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் கேட்கிறீர்கள் என்று நான் பதிவு செய்துகொண்டேன். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) சொல்லுங்கள்.

**திரு. கரி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு தரப்பில் இருந்து சொல்லியிருக்கும் பதிலை நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. அதனால் நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

*(இந்திய தேசிய காங்கிரஸ் உறுப்பினர்கள் அனைவரும் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதனை நீங்கள் முதலிலேயே சொல்லியிருக்கலாமே! ஏன் நேரத்தினை வீணடிக்கிறீர்கள்?

*2017 ஜுலை 18]* **[பேரவைத் தலைவர்]**

*(குறுக்கீடுகள்) சரி, போங்கள். (குறுக்கீடுகள்) திரு. அபூபக்கர் நீங்களும் வெளிநடப்பா? (குறுக்கீடுகள்) வெளிநடப்பு என்றால் சொல்லவே வேண்டாம். (குறுக்கீடு)*

***திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளக்கம் கேட்டார்கள். பதில் சொல்லலாம். ** நான் வெளிநடப்பு செய்கிறேன்.*

*(இந்திய யூனியன் முஸ்லீம் லீக் உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தார்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. அபூபக்கர் அவர்கள் பேசிய வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) திரு. தமிமுன் அன்சாரி உங்கள் கருத்தை நான் பதிவு செய்துகொள்கிறேன். உட்காருங்கள்.*

## (ஆ) சென்னை கொடுங்கையூர், கவியரசு கண்ணதாசன் நகரில் உள்ள பேக்கரியில் ஏற்பட்ட தீ விபத்து

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. சுதர்சனம் அவர்கள்.*

**திரு. எஸ். சுதர்சனம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 15–7–2017 அன்று இரவு 11–30 மணியளவில் கொடுங்கையூர், கவியரசு கண்ணதாசன் நகரில் உள்ள ஒரு பேக்கரியில் தீ விபத்து ஏற்பட்டது. தீயை அணைக்க முயன்ற தீயணைப்பு அதிகாரி திரு. ஏகராஜ் அவர்கள் இறந்து போயிருக்கிறார்கள். அதுபோல், காவலர்கள் மற்றும் பொதுமக்கள் என 48 பேர் படுகாயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கின்ற தீயணைப்பு வீரர்கள் மற்றும் காவலர்களுக்குப் போதிய வசதி மற்றும் மருத்துவர்கள் இல்லாத காரணத்தினால் அவர்கள் தனியார் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டிருக்கிறார்கள். அங்கே பொதுமக்கள் மருத்துவ வசதியின்மையால் மிகவும் அவதிப்படுகிறார்கள். இந்தத் தீ விபத்திற்கான காரணம் என்னவென்றால், சுமார் 4X8 அகலம் உள்ள ஒரு கடையில் கேஸ் சிலிண்டர்கள் மற்றும் அடுப்புகளை வைத்து, மாநகராட்சி நிருவாகத்திடம் அனுமதி*

---

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*